## திருக்கோவில்அமைவிடம் :

கோவைமாநகரின் முக்கியபகுதிகளுள் ஒன்றான உக்கடம் பகுதியில் முக்கியவணிகப்பகுதியான ஒப்பணக்காரவீதிக்கருகில் இத்திருக்கோவில் உள்ளது. கோவை இரயில்சந்திப்பிற்குச் சுமார் 1½ கிலோமீட்டர் தொலைவிலும், உக்கடம் பேருந்து நிலையத்திற்கு அருகில்சுமார் 300 மீட்டர் தொலைவிலும், பொள்ளாச்சி, பாலக்காடு, பழனி ஆகியநகரங்களிலிருந்து கோவை மாநகரினுள் நுழையும் முகப்பில் உக்கடம் போத்தனூர் சாலையில் கிழக்கு நோக்கி இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

## திருக்கோவில் வரலாறு.

ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயில் கட்டுவிக்கப்பட்டு இப்பகுதிமக்களால் அபிமானஸ் தலமாக வழிபட்டு வருகிறது. கொங்கு நாட்டில்பெருமாள், அருள்மிகு லட்சுமிநரசிம்மராக எழுந்தருளியுள்ள தலங்களுள் இத்தலம் சிறப்புவாய்ந்ததாகும்.

## திருக்கோவில்அமைப்பு :

ஏறத்தாழ 9000 சதுரஅடிபரப்பில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ஆலயத்தின் பழைய அமைப்பானது திருக்கோயில் முகப்பில்சாலகாரமும், இரண்டாவது நுழைவாயிலில் இராசகோபுரமும் அமைந்திருந்தது. இராசகோபுரத்தைக் கடந்து கருடமண்டபம், அதனையடுத்து மகாமண்டபம், அர்த்த மண்டபம், மூலவர் சன்னதி என்றவரிசைப்படி இத்திருக்கோவில்அமைப்புஉள்ளது. கருங்கல்மண்டபமான கருவறையில் மூலவர், அருள்மிகு லட்சுமிநரசிம்மர் கருணைமயமாக காட்சியளிக்கின்றார்.

கருடமண்டபத்தின் இடதுபுறத்தில் தெற்குநோக்கி இடப்பக்கம் ஆஞ்சநேயர் சன்னதியும் வலப்புறம் இராமனுசர், நம்மாழ்வார், மணவாளமாமுனிகள்ஆகியோர் எழுந்தருளியுள்ள சன்னதிகளும் இருந்தன. கருடமண்டபத்திற்கு இருபுறமும் நுழைவாயில்களுடன் மகாமண்டபம் அர்த்தமண்டபத்துடன் இணைந்து சுற்றுப்பிரகாரம் உள்ளது. பழைய இராசகோபுரம் மூன்று நிலைகளைக் கொண்டதாகவும் மூன்று கலசங்களை உடையதாகவும் இருந்தது. மூலவர் விமானம் ஏகதள விமானமாக உள்ளது.தற்போது திருப்பணி வேலைகள் நடைபெற்றுவருவதால் கோவில் அமைப்பில்மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது.

## சுவாமி லட்சுமி நரசிம்மர் அவதாரசிறப்பு

நரசிம்ம அவதாரத்தில் திருமால் இரணியனைவதம் செய்தபின்னர் மூர்ககமும் உக்கிரமும் கொண்டவராகவிளங்கினார். அவதார மூர்த்தியாகிய நரசிம்மரின் உக்கிரத்தைத் தணிக்கவல்லவர் அருள்மிகு லட்சுமிதேவியேஎன்றுணர்ந்த தேவர்கள்அனைவரும் சென்றுதேவியைவேண்ட, திருமாலும் தேவியின் வழிபாட்டில்மகிழ்ந்துதேவியை தன் இடதுதொடைமேல் இருத்தி அருள்மிகு லட்சுமிநரசிம்மராக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். திருமால் இங்கு அமர்ந்த கோலத்தில் உள்ளார். உற்சவர் இலட்சுமிநாராயணர் ஆக உள்ளார். இத்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி மிகவும் ஆற்றல்வாய்ந்தவர்.பக்தர்கள் வேண்டும் வரம் அளித்துஅருள் பாலிக்கும் கருணை உள்ளம் கொண்டவர். திருமணம் ஆகாதவர்கள் அருள்மிகு இலட்சுமிநரசிம்மரைவணங்கி வழிபாடுசெய்தால்விரைவில் திருமண காரியங்கள்கூ டிவரும் என்பதுதிண்ணம்.

திருக்கோயிலின் பின்புறம் சுற்றுப்பிரகாரத்தைஅடுத்துதிருமணமண்டபம் உள்ளது.திருமண மண்டபத்திற்கு முன்புறம்.அரசுவேம்புஇணைந்தமரத்தின் அடியில்தனிமேடையில் அருள்மிகு விநாயகர் சன்னிதி உள்ளது. திருமணமண்டபம் தற்போது தீபமண்டபமாகபயன்படுத்தப்பட்டு வருகிறது.